தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-10-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மையில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய பயிற்சி வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் துவங்கப்பட்டது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இ-விரிவாக்க மையத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் வேளாண்மைப் பயிற்சி இன்று (20-10-2016) துவங்கப்பட்டது. வேளாண்மை தோட்டக்கலை, பட்டுப்புழுவியல், விதைச் சான்றளிப்பு ஆகிய துறைகளைச் சார்ந்த 20 விரிவாக்கப் பணியாளர்கள் இப்பயிற்சியில் அக்டோபர் 20 முதல் 27 வரை கலந்து கொள்கிறார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தமது துவக்கவுரையில் பேசுகையில் வேளாண் கள அலுவலர்கள் நவீன தகவல் தொழில் நுட்ப உபகரணங்களைக் கொண்ட வேளாண் விரிவாக்கப் பணிகளைச் செய்வதற்கு தம்மை மேம்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். முக்கியமாக பயிர் பாதுகாப்பு மற்றும் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் தகவல்களை விவசாயிகளுக்கு எளிய முறையில் உரிய நேரத்தில் பரிந்துரைக்கும் அளவிற்கு தகவல் தொழில் நுட்ப உபகரணங்களை செம்மையே பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். மேலும் அவர் பல்வேறு விரிவாக்கத் திட்டங்கள் தமிழ்நாட்டில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டதன் பலன்கள் மற்றும் பாதகங்களை கண்டறிந்து புதிய வேளாண் விரிவாக்க முறைகளை உருவாக்க வேண்டுமாறு தெரிவித்தார்.

வேளாண்மையில் நவீன தகவல் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவது குறித்து தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளும் வண்ணம் பயிற்சியில் கலந்து கொள்வோர் தனி கவனத்துடன் செயல்படுவதுடன் உழவர்கள் புதிய தொழில் நுட்பங்களை கடைபிடிக்கும் போது எதிர் கொள்ளும் பிரச்சனைகளையும் கண்டறிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று

துணைவேந்தர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். பயிற்சி தொடர்பான கையேடு மற்றும் குறுந்தகடை துணைவேந்தர் அவர்கள் வெளியிட்டார்.

இந்த பயிற்சியின் இயக்குநரும் மற்றும் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர். ஹெ. பிலிப் அவர்கள் பயிற்சி தொடர்பான கருத்துக்களை கூறும் போது வோள்ணமையில் நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். நவீன காலங்களில் ஏற்பட்டுள்ள தகவல் தொடர்பு சாதனங்களில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு வேளாண்மையில் நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் உபயோகம் தொடர்பான பல்வேறு பரிணாமங்களை விளக்கினார்கள். மேலும் பயிற்சி தொடர்பான பல்வேறு தலைப்புகளையும் செயல்முறை திட்டங்களையும் எடுத்துரைத்தார். அன்றாட விரிவாக்க பணிகளின் பல்வேறு நவீன தகவல் தொடர்பு சாதனங்களை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

முனைவர் ச. பழனிசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், பயிற்சி பிரிவு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் பேசுகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விரிவாக்கப் பணிகள் பெருமளவிற்கு நவீனமயமாக்கப்பட்டுள்ளதாகவும் துணைவேந்தரின் அறிவுரைப்படி வேளாண் விரிவாக்கத்தில் புதிய யுக்திகளை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

முனைவர் ச. கார்த்திகேயன், பேராசிரியர், இ. விரிவாக்க மையம் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

மக்கள் தொடர்பு அலுவர்